




ஓலை 146| ஓசை 269| நவம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



'உரைவேந்தர்' ஔவை.துரைசாமி

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

## பொருள்

தம் மகிழ்ச்சியில் மனவலிமை பெறும்பொழுது எல்லாம் முற்காலத்தில் மகிழ்ச்சியால் மறதி கொண்டு அழிந்தவர்களை நினைவிற் கொள்க.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## போனக மென்பது தானுழந் துண்டல்!

பா வகை : எண்சீர் மண்டிலம்




சிற்றெறும்பும் பிறருழைப்பில் வாழ்ந்திடாமல்,
சீருடனே முயன்றுழைத்தே உணவை உண்ணும்;
சிறுமையென எண்ணிடாமல் முயன்று தானே
சிலந்திவலைப் பின்னியேதான் உழைத்தே உண்ணும்;
வறுமையெண்ணி எவ்விலங்கும் இலவ யத்தால்
வகையாக உண்ணவுமே நினைப்ப தில்லை;
மறுக்காமல் முயன்றேதான் பாடு பட்டே
மாந்தருமே உழைத்துண்ணல் விருந்தே யாகும்!

உழவருமே ஒருநாளும் உழைக்கா விட்டால்
உட்கார்ந்து உண்ணத்தான் எவராலாகும்?
தழும்பேறி உடல்குன்றி தொழிலர் தாமும்
தன்னுணவை உண்பதற்கே உழைக்கா விட்டால்
அழுக்கேறி அவர்வாழ்வு போகு மன்றோ;
அவரவரும் பிறருழைப்பில் உண்டி டாமல்,
வழுவாமல் முயன்றுழைத்தே உண்ண வேண்டி
வகையறியா சோம்பேறி மாய்தல் மேலாம்!




பறவைகளும் விலங்கினமும் மற்ற எல்லாப்
பாரில்வாழ் உயிரினங்கள் முயன்று ழைத்தே
உறவாடி உண்டுத்தான் மகிழும் போது,
உழைக்காமல் மாந்தருமே களவு செய்தே
பிறருழைப்பில் உண்டுத்தான் கொழுக்க வேண்டி,
பிழைசெய்தே உயிர்ப்பதுவும் மாந்த மாமோ?
நிறம்பார்ப்போர் பாமரரின் உழைப்பில் பார்க்கார்;
நிதம்பிறரின் உழைப்பிலுண்டு பிழைத்தல் தீதே!

**இலக்கணக் குறிப்பு:**
கழிநெடிலடி மண்டிலப் பா வகைகளில் எண்சீர் மண்டிலம் ஒன்று இவ்வகை பாக்களின் வாய்ப்பாடுகள் நிறையவுண்டு; இதில் அரையடிக்கு மூன்று காய் ஒரு மா; இரண்டு காய், ஒரு மா, ஒரு தேமா எல்லாமே ஈரசைச் சீர் என்று பலவகை மண்டிலங்களுண்டு. இதில் மேலேயுள்ள பாடல் அரையடிக்கோர் இரண்டு காய் ஒரு மா ஒரு தேமா என்ற சீர்களாக ஒரு அடி எட்டுச் சீர்களைக் கொண்டு, ஒரு அடி இரண்டு வரிகளாக மடக்கி எழுதப்பட்டுள்ளது என்று உணர்க. ஒரு மண்டிலம் நான்கு அடிகள், நான்கடிகளுக்கும் ஒரெதுகை. அடி தோறும் முதல் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். புளிமாச் சீரில் தேமா வரலாம், ஆனால், தேமாச் சீரில் புளிமா வரலாகாது. இருப்பினும் கருத்துக்கு முதன்மைக் கொடுத்து, விரவி வரலாம்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## பா வகை : நேரசை கட்டளைக் கலித்துறை

எண்ணம் சிறக்கவே
   ஏற்றம் பெறவே   எழுந்திடுக.
பண்ணல் தழைக்கவே
   பண்பை மனதில் பதித்திடுக.
வண்ணம் மிகுந்திட
   வஞ்சம் அகற்றி வதிந்திடுக.
தண்மை நிறைந்திடத்
   தம்பம் ஒதுக்கித் தருக்கிடவே.



***************************

பண்ணல் - செய்பவை
தம்பம் - சினம்
தருக்குதல் - களிப்படைதல்.
****************************


கவிஞர் செ. கலைவாணி

# உலகை உயர்த்தும் உழைப்பு

உழைப்பென்ற மந்திரமே உருவாக்கும் அனைத்தும்
உயரத்தில் ஏற்றிவிடும் உழைப்பென்ற அமைப்பும்
அழைக்காத உழைப்பதுவும் அழிவிற்கே ஒப்பாம்
அறிவதுவும் உணர்ந்திட்டால் அழகாகும் வாழ்வாம்
பிழையாகி நிற்காதே பிரிந்திருந்தே உழைப்பை
பிறவியதன் பயனதுவும் பின்னோடிச் செல்லும்
உழைப்பாளர் இல்லாமல் உயர்வேதும் இல்லை
உலகத்தின் விரிவிற்கோ உழைப்பேதான் எல்லை

உழைக்கின்ற வரையில்தான் உன்மதிப்பும் இருக்கும்
ஓய்வெடுக்கும் கடிகாரம் உணர்த்திடுமே நமக்கும்
அழகாகும் யாவையுமே அர்ப்பணிக்கும் உழைப்பால்
அடையாளம் தேடிவரும் அயராமல் உழைத்தால்
உழவனவன் உழைப்பின்றி உணவதுவும் ஏது?
உழைக்காத முன்னேற்றம் உன்வாழ்வில் யாது?
கிழக்காக ஒளிவீசு கிடைக்கின்ற வாய்ப்பில்
கீற்றாக உன்னுழைப்பு கிழிக்கட்டும் இருளை

திரைப்படமா வாழ்வதுவும் சிலநொடியில் மாற?
சீரான உழைப்பதுவே சிகரத்தில் ஏற்றும்
அரைமனதாய் உழைக்காமல் அகம்மலர உழைத்தால்
அற்புதங்கள் நிகழ்ந்திடுமே அன்றாடும் வாழ்வில்
மரம்கூட உழைக்கிறதே மாந்தர்க்கு நிழலாய்
மாக்களாகிப் போகின்றோம் மதிமறந்த உழைப்பால்
வரவாக உழைப்பிருந்தால் வளமாகும் வாழ்வே
வழிபிறக்கும் வலிகளிலும் வற்றாத உழைப்பே!



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்


மனத்தின்
விளிம்புவரை
தளும்புகிற நிலையில்
அலுப்பின்றி
கொடுத்துக்கொண்டிருக்கிறாய்.
உன் நினைவிழைகளை.

இதயக்கரைகளை உடைத்து
அதிவேகமாய் ஜீவநதியெனப்
பிரவாகமெடுத்துப்பாய்கிறது.

அவை
என்னுயிரிழைகளைக்
கூர்தீட்டி
யாகமும் நிகழ்த்துகிறது.

நெருப்புக்கு எதிரி
நீராகலாம்.
நீருக்கு நீரே
எதிரி.

உயிரிருத்தல்
மட்டும் போதாது.
நினைவிழைகளை மீட்டிட
சாகாவரம் பெற்றிட
வேண்டும்
ஆன்மா!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பக்தீ யெனும் பாசவலை



மனிதர்கள் வாழ்வெங்கும் பாச வலைகள் ;
மயக்கிட்ட வலையினிலே பொம்ம லாட்டம் !

இனிதாகும் வலைகளிலே இறைமை பக்தி ;
இயல்பினிலே வரவேண்டும் ஆன்ம பயிற்சி !

கனிந்திட்ட வயதினர்க்கு ஞானம் ஊட்டும் ;
காவலனாய் நின்றிட்டே வழியைக் காட்டும் !

புனிதனாக உருவெடுக்க அகத்தில் மாற்றம் ;
பொல்லாதார் மனத்திலுமே ஒளியைப் பாய்ச்சும் !

அறிவுசாரா பக்திகொள்ளின் கேடும் உண்டே ;
ஆண்டவனின் பெயராலே மூடப் பழக்கம் !

பொறியடங்கா போலிகளாய்ச் சாமி யார்கள் ;
புதியதாக அவதாரம் ஏமா றாதே !

நிறைந்திட்ட ஆன்மீகக் கருத்தில் ஆய்ந்தே
நெருடலாக நின்றிட்ட சொற்கள் விலக்கு !

செறிந்திட்ட இணக்கத்தால் மதங்கள் காணீர் ;
சீர்கொண்ட பக்திகொள்ளின் முரண்கள் உண்டோ !

கவிஞர் ஆ சீ கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# பிழைக்கும் நிலை

தீதினினும் பெருந்தீது
தீயோர் அடிதொழல்.
தீராப் பழியேற்று
மெய்மை மறந்து
பொய்மை நிறுத்தி
பிழைக்கும் நிலை.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

தீராக்காதல் உன் மேல்
காலமும் தேயாக் காதல்

மண்ணும் விண்ணும் போல்
தாயும் சேயும் போல்
கடலலையும் கரையும் போல்

இயற்கையாக நிகழ்ந்திடும் காதலுக்கு
ஈடேற்றம் ஏதும் உண்டாவதில்லை

அவரவர் பிடித்தங்களின்
பொருத்தம்தான்
இன்பங்களை
உயிர்ப்பித்து விடுகின்றன



கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை (இலங்கை)

# நிறை அழிதல்

அதிகாரம் : 126



நாணமெனும் தாழிட்ட
என்நெஞ்சக் கதவை.
காமமெனும் கோடரிவந்து
வஞ்சமாய் உடைத்தெறிகிறதே.

இரக்கமில்லா இக்காமமது
நள்ளிரவில் நெஞ்சேறி.
உறக்கம் கொன்று
அல்லல் செய்கிறதே.

காமத்தை அடக்கிடுவேன்
என்றெண்ணினேன் அதுவோ.
தும்மல்போல் உச்சமேறி
தானே வெளிப்படுகிறதே.

நெஞ்சுறுதி கொண்டவளென
எனைநினைந்தேன் மாறாய்.
வஞ்சித்து கட்டுப்பாடின்றி
வெளிப்படுதே காமமே.

பிரிந்தவன்பின்னே செல்லாதிருக்கும்
பெருந்தன்மையது நெஞ்சில்.
பெருங்காமநோய் பற்றிக்கொண்ட
இருதயங்களில் நிலைப்பதில்லையே.

என்னை விட்டுப்பிரிந்த
என்னவனின் பின்னே.
நான் செல்லவிரும்புதல்
வன்மையாய் இரங்கத்தக்கதே.

காதலன் திரும்பிவந்து
மனம்நிறைய காதலிக்கையில்.
காதலியவள் தனைமறந்து
நாணம் துறந்துவிடுகிறாளே.


வஞ்சகனவனின் பணிந்த
காதல்கொண்ட சொற்களன்றோ.
என்மன அடக்கத்தை
அழித்துப்போடும் ஆயுதமே.

ஊடல்கொண்டு என்னவனை
வெறுக்க நினைந்தென்மனமோ.
காதலோடவனைக் கண்டதும்
கட்டித் தழுவிக்கொண்டதுவே.

நெருப்பிலிட்ட கொழுப்பையொத்த
மங்கையரின் மனமது.
ஊடலுக்குப்பின் கூடலெனும்
உறுதியில் நிலைப்பதில்லையே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோயில்

# ஆசான்கள்




தனிமையை நீக்கி
தாகம் தீர்த்தத்திடும்
அறிவினை புகட்டி
அகிலத்தில் ஞானியாக்கிடும்

பொறுமையைத் தந்து
பொக்கிஷம் கண்டிடச் செய்யும்
பொறுப்புள்ள ஆசான்
புகழையும் தேடியே தந்திடுவான்

ஆற்றல்களின் தேடல் அதிகமாகும்
ஆசையுடன் புதுப்படைப்பினையும்
தோற்றுவிக்கும்
ஞாலமே போற்றிடச் செய்யும் பிரசையாக்கி
கைதட்டல்கள் பெற வைக்கும்

மனிதனிடமுள்ள தீய குணங்களை தீயில் எரித்து
தாண்டவம் ஆடிடும்
தன்னலக் கால்களை உடைத்தெறிந்து
சிறந்த மனிதன் என்ற பட்டம் சூட்டிடுமாம்

தனிமைக்கு துணை நின்று
தாகம் தீர்த்து வைக்கும் வாய் பேசாத ஆசான்கள்

கவிஞர் திருமதி. கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

# இழந்துவிட்டேன் காதலை

ஆணும் பெண்ணும்
சங்கமித்தால் மட்டுமே
காதல் என நினைத்திருந்தேன்

நீ இறந்த பின் தான்
உணர்ந்தேன் என் மீது
நீ வைத்ததும் காதல் என்று

பாட்டியே உணர்ந்தென்ன
பயன் உணர்ந்த போது
நீ இல்லையே அருகினிலே

நான் உனக்கு கடனில்லை
என உணர்த்திவிட்டு சென்றாயோ

நீ என் மீது வைத்து அன்பிலான
காதலை இழந்து தவிக்கின்றேன் இன்றோ!

யாரும் உன்னை போல்
என் மீது காதல்
செய்யவில்லையே என்றுமே!



கவிஞர் அஸ்ரா அஸ்ரப், அக்குரணை (இலங்கை)



பெற்றோர் உற்றார் அறியாத உறவு!
இருள் கவிழக் காத்திருந்து
கள்வனைப் போல் தேடிவர!
நமக்குள் இருக்கும் தொடர்பு
நாலுபேர் கண்டு விட்டால்
கிசுகிசு பரவுமோ? என்ற பயமில்லை!
அரசியலில் ஆட்டம் போட்டு
ரகசியமாய் பெட்டி கைமாறியதா?
என்ற கேள்விக்கு அவசியமில்லை!
சட்டத்திற்குப் புறம்பான வேலையில்லை!
நாட்குறிப்பில் எழுதுகோல் கொண்டு
உன்னில் நான் எழுதும் ஆழம் காண
இயலாத ரகசியங்கள்!
நமக்கு மட்டுமே சொந்தமான
நினைவுகள்!


கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# வார்த்தைகளற்ற உலகமும் விரியுமா?

வார்த்தை ஏதுமின்றி
அகிலமும் இல்லை/
வார்த்தைகளால் பேசிட
அனைத்தும் நலமாகும்
வார்த்தைகள் கோர்வையாகி
காவியமும் காப்பியமும் உண்டானதே

வார்த்தை இல்லையெனில்
வாழ்வும் வளமாகுமா
மௌனத்தின் மொழிகளை
அறிந்திடல் எளிதோ
சரமான வார்த்தைகளே
உரையாடலுக்கு அஸ்திவாரம்

பட்டிமன்றமோ பாட்டுமன்றமோ
வார்த்தையின்றி அமையுமோ
அன்புக்கு வார்த்தை
அறிவுக்கு வார்த்தை
அதிகாரத்துக்கு வார்த்தை
ஆளுமைக்கும் வார்த்தை



இருமனங்கள் கலந்திடவும்
வார்த்தையே ஆதாரம்
கேள்வி கேட்கவும் வார்த்தை
பதிலுரைத்திடவும் வார்த்தை
வார்த்தைகளற்ற
உலகமும் விரியுமா?

நிச்சயமாக முடியாது
நிதர்சனமும் ஆகாது
சச்சரவு உண்டாவதும் சமாதானம்
அடைவதும் வார்த்தைகளாலே
கதையும் கவிதையும்
வார்த்தைகளின்றி தோன்றிடுமோ

தெளிவான விளக்கத்திற்கு வார்த்தை
தெளிவடைய வைப்பதுவும் வார்த்தை
வார்த்தை இல்லாதிருந்தால்
அனைத்துமே முடங்கிடும்
வார்த்தைகளற்ற
உலகமும் விரியுமா?

நிச்சயமாக இல்லை
வார்த்தைகளை நேசிப்போம்
வாழ்வை இரசிப்போமே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

எச்சில் இலையில்
சற்றும் கூச்சமின்றி
பசியாறும் அவலம்!
நசியாகும் மானிடம்!
அலைபேசியில் படமெடுத்து
ஊடகத்தில் பதிவு
செய்யும் கீழ்மை!
கசியும் கண்ணீர்
பசியாற்றுமா!
அசியென பசியை வெட்டுமா?
தசிக்கும் சினம்,
புசிக்கும் உணவாகுமா?
அசிங்கம் என்றே
அருவருத்து புறந் தள்ளல் சரியா?
வள்ளலாக அள்ளிக் கொடுக்க
ஏலாதெனினும்;
நிழல் படம் எடுத்து
பதிவு செய்யாமல்
'ஐயோ! பாவம்!' என்று
அப்போதைய பசி தீர்க்கும்
இறை ஆகலாம்'
இல்லையா?



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

கண்ணீரிலும் காயத்திலும்
உடனிருக்கும் தாயுமானவள்


எந்தன் நடைபயணத்தில்
கால்களாய் அவள்
எனது கவலைகளின்
ஆறுதலாய் அவள்

என் சொற்களின்
மொழியாய் அவள்
மல்லிகை மலரின்
முகமாய் அவள்

மாதங்களில் கிழியாத
நாட்களாய் அவள்
அன்பின் அடையாளத்தில்
புத்தனாய் அவள்

புன்னகை முகத்தின்
முகவரியாய் அவள்
உடன் வரும்
உற்சாகமாய் அவள்

மரணம் என்னை
காக்கும் கடவுளாய்
அவள்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தூய்மைப் பணி

ஊரில் தெருவில் என பல
இடங்களில் துப்புரவாளர்கள் பணி
நடந்து கொண்டு இருக்கிறது
தினந்தோறும் ஏதோ ஒரு துன்பத்தினை
அனுபவித்து கொண்டே வருகின்றன
எல்லா இன்னல்களையும் சகித்து
ஒரு வேளை சோற்றுக்காக உழைத்து
வாழ்க்கையை வாழ அன்றாடமும் போராட்டமே
யாருக்கும் உதவவில்லை என்றாலும் பரவாயில்லை
தயவு செய்து மற்றவர்களை
குறை கூறாதீர்கள் அசிங்கப்படுத்தாதீர்கள்
தங்களை போலவே அவர்களும் மனிதர்கள் தானே
தான் செய்தால் நியாயம்
அதுவே பிறர் என்றால் அநியாயமா?
எல்லோரும் சமம்
சமத்துவத்தை போற்றுவோம்



கவிஞர் மோனிஷா

# அருமருந்து

ஒரு புத்தகம் இல்லாமல் என்னால்
தேநீர் அருந்த முடியாது
ஒரு கோப்பைத்தேநீர்
இல்லாமலும் என்னால்
புத்தகம் அருந்த முடியாது

தனியே தேநீர் அருந்தப்
பொறுமையில்லை
அதன் சூடு மெல்லத்
தணிகையில்
தொண்டை நனைக்க
ஒரு நல்ல துணையாக
புத்தகம் வேண்டும்
அது மட்டுமல்ல
ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களென
நேர மேலாண்மையும்
அதிலுண்டு!

புத்தகத்தைத் தனிமையில்
விடலாகாது
அதன் சுவை இரட்டிப்பாக
புத்தக நட்பு வலுப்பட
ஒரு கோப்பைத் தேநீர் நல்லது
தொடர்ந்து வாசித்து முடிக்க
தேநீரொரு அருமருந்து



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஏட்டின் காதலி



பெண்ணே! உன் கையில்
நான் ஓர் காதலன்

நீ விரும்பும் ஏடாக
நானிருப்பேன்

உனக்காக எழுத்துருவில்
வந்த உறவும் நானே

பக்கங்கள் ஒவ்வொன்றும்
உனக்கானதாய் நான் மாறுவேன்

உன் துயரங்கள் மாற்றும்
பொக்கிஷமாய் நானிருப்பேன்.

பெண்ணே! நீ எனை
நேசிப்பதால் நான் உனை
காதல் செய்வேன்.

ஏடாக அல்ல நீ விரும்பும்
வரிகளாக என்றும் இருப்பேனே.

உனக்கான திறமைக்கு
களம் அமைப்பவனும் நானே.

எனக்கான அடையாளம்
தந்தவளும் நீயே பெண்ணே!

எனை என்றும்
மறவாதே பெண்ணே!

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை, கண்டி

மாணவர்கள் கற்கும் மாண்பமை இடமாய்
காணும் விதமாய் காட்சியும் பெருக்குதே
அறிவை பெருக்கி அடக்கமும் கனியாய்
கற்பிக்கும் இடமாய் கனியுமே உலகில்

பெற்ற அறிவை பெருக்கி அளிக்கும்
உற்ற துணையின் உண்மை வழியே
ஏட்டுக் கல்வி ஏழ்மையைப் போக்கி
ஊட்டும் விதமாய் உன்னதம் மொழியாய்



ஆசானின் அன்பும் அளவிலா பெருகி
பேசும் வகையில் பெருமையும் கொள்ளுமே
அறிவை பெருக்கி அறிஞராக மாற்றி
திறனை தந்தே திறமைகள் கூட்டிடுமே

ஆசானின் அன்பும் அளவிலா பெருகி
பேசும் வகையில் பெருமையும் கொள்ளுமே
அறிவை பெருக்கி அறிஞராக மாற்றி
திறனை தந்தே திறமைகள் காட்டிடுமே

அனைத்து செல்வத்தைவிட அளவிட முடியாத
இனித்த கரும்பாய் இனிக்குமே வாழ்வில்
செல்லும் இடமெல்லாம் செழிப்பைத் தந்தே
வெல்லும் விதவித வெற்றியை காட்டுமே

விழிப்புணர்வு பெருக்கி விந்தைபல புரியும்
செழிப்பான வளத்தை சிறப்பில் தந்திடுமே
அனைத்து சலுகையையும் அனைவர்க்கும் அளித்து
நினைக்கா பேற்றையும் நிறுவுதே அரசும்


அரசுப் பணிக்கான அச்சாணி படிப்பை
உரமாய் தந்தே உற்சாகமும் ஊட்டுதே
ஒளிமயமான எதிர்காலம் ஒவ்வொரு நாளுமே
மிளிரும் வாழ்வை மேதினியில் தந்திடுமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

தேநீரின் சூடு
நெஞ்சாங்கூட்டை
சூறையாடுவது போல.

இறகு ஒன்று
பறவையிடமிருந்து தனித்துக்
காற்றில் தத்தளித்து தாலாட்டாய்
பூமிக்கு வருவது போல.

திடீரென்று இருள் வானில்
புதிதாய் மின்னும்
விண்மீனின் ஒளிவெள்ளம் போல.



தனித்து விட்ட அந்தத்
திரும்பலில் சந்தித்துக்
கொண்ட விழிகள்.

இதயம் இறங்கி பொங்கி வழிகிறதே
நுரை ததும்பி கொதித்த
பால் பானையாய்.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

அன்புடையார் துன்புறுதல் கண்டே ஒருவன் கண்கள் கண்ணீர் உகுக்கும்
தன்னை யாரும் காணக் கூடாதென தாளிட்டு எவ்வாறு மறைக்கும்?

அகத்திலே அன்பிலார் எல்லாம் தனது என்பார்
அகந்தையின்றி அன்புடையார் என்பும் பிறர்க்கு என்பார்

அரிய உயிர் பெரிய உடலில் பொருந்துவது ஏனோவெனில்
உரிய அன்போடு பொருந்தி வாழ்வதற்கேயாம்

பிறர் தம்மை விரும்பும் தன்மையை அன்பு வழங்கும்
உற்ற நட்பைக் கொடுத்து ஊருக்கே முழங்கும்

அன்புடையராய் திகழ்தலின் பயன் யாதெனக் கேட்பின்
அன்புடை இல்வாழ்க்கையில் இன்பமும்
மறுமையில் நிகழும் பேரின்பமுமே



அறம் புரிவதற்கு மட்டுமே அன்பு காரணமென்பர் அறியார்
வீரம் புரிவதற்கும் அதுவே துணையென உணர்வர் பயன் தெரிவார்

என்பு இல்லாத உயிர்களை வெயிலே வருத்தும்
அன்பிலாத உடல்களை ஓயிலாய் அறமே திருத்தும்

அன்பில்லாமல் மக்கள் வாழும் இல்வாழ்க்கை நிகராகுமே
நன்றாய் பட்ட மரம் தளிர்க்குமே சகாராவிலே

உள்ளுறுப்பில் அன்பு என்றும் ஒட்டாதவரிடத்தே
துள்ளித் திரியும் புறத்துறுப்புகளால் பயனேதும் கிட்டாதே

அன்பு தழுவிய யாக்கையே உயிர்நிலை பெறும் வீடு
அன்பு வழுவிய போக்கைப் பெற்றால் என்புதோள் போர்த்திய கூடு

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# சுடர்விளக்கின் கதை


வாழ்வு என்னும் பாதையில்
எத்தனை வலிகள்? எத்தனை போராட்டங்கள்?
சிறு வயது முதலே சவால்கள் கண்ட அவனுக்கு
பின்னர் நடக்க போகும்
அதிசயம் தெரியாது போனது என்னவோ?
பதரித் தவித்தான் ஒவ்வொன்றுக்கும்
அவன் நினைத்த கனவு தாண்டி
இறைவன் இட்ட இடம் வேராக உருவெடுக்க
அவனுக்குள் சலிப்பு என்ற செடி வளரவே
பார்ப்போம் என்ற வார்த்தை தாங்கி
எடுத்த காலை முன் வைத்தான் அக்கணமே!
ஏன் என்று தெரியாது
தெரியா திறமை வெளியிட தானாய் செல்லாமல்
தனக்காக மாட்டி கொண்ட அந்த வாய்ப்பை
கையில் எடுத்துப் பார்த்தான் சில நொடியே
அந்த நொடி புரிந்த அவனுக்கு
அதிலும் சவால் துணைக்கொண்டு வரவே
இறங்கி போராட தைரியம் எங்கு தான் வந்ததோ?
முழு மூச்சில் அரங்கேறிய ஒருநாள்
அதிலும் அவன் மேல் பலருக்கு வெறுப்புகள்
ஆனால் அதில் அவனுக்கோ கோடிப் பரபரப்புகள்
என்றும் பாராத கடின உழைப்பு அவனுக்குள் ஆழவே
காலம் செல்ல முகங்கள் பார்த்த உலகம்
ஒரு நாள் அவனை அரவணைக்க ஆரம்பிக்க
மகானும் கண்டு போற்றும் அளவுக்கு புகழும் காத்து கிடக்கவே
பல துறைக்கும் ஒரு கதாபாத்திரம்
இவனே சிறந்ததாய் தென்பட
அனைவருக்கும் காலம் காட்டும் முன்னோடி
உதாரணம் என்ற பாத்திரத்தை இவனும் ஏற்க
அணைந்து கிடந்த அவனுக்கு இறைவன் ஏற்றிய சுடரொளி
என்றும் அணையா சுடர்விளக்காக கிடக்கிறதே
இதுவே அச்சுடரின் அழகிய கதை



கவிஞர் ஸபா, கண்டி, இலங்கை

# அவதார மாமனிதர்

நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை தோன்றிடும்
மகான்கள் சித்தர்களும் புத்தர்களும்
உலகம் போற்றும் மாமனிதரும்
மனித குலத்தின் மாண்பினை உயர்த்திடவே
அவதரித்த அற்புத மனிதர்கள்.



இளமையிலே கல்வியில்லை
வாழ்விலே வசதியில்லை
பொறுப்பான பதவிகள்
தேடியே வந்தாலும்
தேசத்தின் நலனுக்காக
"தேகம் தேய" உழைச்சாரே.

அதிகாரத் தொனியில்லை
பதவியிலே கர்வமில்லை
எளிமையான வாழ்வாளே
இதயம் வென்ற மாமனிதர்.

நாடு அதை நாடு என நாளெல்லாம் உழைத்தாரே
ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைத்திடவே
அவதாரமாய் தோன்றிட்ட அற்புத மாமனிதர்.

கருமமே கண்ணாய் கடமையே மூச்சாய்
மக்கள் சேவையே மகேசன் சேவையாய்
காலமெல்லாம் உழைத்தே
நெஞ்சம் நிறைந்த மாமனிதர்.

கல்வி இல்லா ஓர் மனிதன்
அவனியிலே இல்லையெனும்
அற்புதம் படைத்தாரே
ஏழைகளின் உயர்வுதான்
சுவாசிக்கும் மூச்சென
நாளெல்லாம் உழைத்தாரே
*கர்மவீரராய்*
மக்களின் நெஞ்சமெல்லாம்
தெய்வமாய் நிறைந்தாரே.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# மழலைச் செல்வம்

மனதின் வலிகளை போக்கும் மருந்தாய்
வாழ்வின் மாற்றங்களை தரும் மகிழ்வாய்
கவலைகளை களிப்பாக்கும் காதலாய்
இருட்டில் வெளிச்சம் தரும் ஒளியாய்
இனிமையான நினைவுகளை தரும் இன்பமாய்
இதமான இச்சைகள் தரும் காவியமாய்
கண்ணீரை காணாமல் செய்யும் கடவுளாய்
பாரங்கள் போக்கி பறிதவிப்பை நீக்கி
மடியிலே தவழ
மணிச் சுடர் ஒளியாக
மழலையே நீ வருவாயாக



கவிஞர் தி. கமலவேணி, மானியம் ஆடூர்

# என் வீட்டு வான் நிலா

விண்மீன்கள் அத்தனைக்கும் ஓர் ஒற்றைத் தலைவி
எம் வீடெனும் வானில் உதித்த பூரணை இவள்
தாமரை இதழ் விரித்தாற்போல் பரவசிக்கும் மழலை
புன்னகை பூக்கும் போதெல்லாம் பூக்களின் தேசம்

சின்னப் பாதங்கள் மண்ணில் பதிந்தால் கூட
சந்தனக் காடெனச் சுவாசமே சுகந்தமாகும்
கார்மேகம் கவிழ்ந்திடாத காலையின் கதிரொளி
கண்களில் மின்னும் எங்கள் கனிமொழிப் பாவை




அன்பின் இலக்கணமவள்
அன்னை தந்தையின் ஒற்றைப்பிடிமானம்
அச்சம் அறியாத அஜந்தா ஓவியம்
அவள் குரல் கேட்கையில் யாழுமே தோற்குமே
அழுகை கூட ஒரு குயிலின் கீதம்
தீயெனச் சுடாமல் மெழுகென உருகும் மனம்

பெண்ணெனப் பிறந்தாதாலேயே
பெருமைக்குரியவள் அவள்
பேரழகுச் சிலையென சயனிப்பாள் என் மடியினில்
கற்பனையும் வரையாத காப்பிய நாயகி
இறைவனவன் ஈந்த வரமவள்
இவள் எங்கள் வீட்டின் இணையற்ற பொக்கிஷம்
இதயத்தில் என்றும் ஒலிக்கும் இனிய சங்கீதம்
எம் நாளைய உலகின் நட்சத்திரத் தீபம் நீ

மகளே!
உன் குரல் ஒலித்துக்கொண்டிருக்கும் காலமெல்லாம்
எம் இல்லத்தில் சந்தோச கீதம்
இசைத்துக்கொண்டேயிருக்கும்.

கவிஞர் றிஷாதா றஷீத், அக்குறணை

அந்த நூலகம்
நிறைய இருந்த
புத்தகங்களை படித்து
முடித்தாகி விட்டது - ஆனால்
தினமும் அருகில் வந்தமரும் அவளை
படிக்கத்தான் முடியவில்லை.



எல்லாக் காதலிலும்
அவன்தான் காத்திருப்பான்
அவளுக்காக இந்தத் காதலிலோ
அவள்தான் காத்திருக்கிறாள்
அவனுக்காக.

ஒரு காலத்தில்
காதலோடு பேசியவர்கள்
இப்போது கடமைக்காக பேசுகிறார்கள்
அவ்வளவுதான் மாற்றம்
பெரிதாய் ஒன்றும் இல்லை.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

காலமும் நேரமும்
கடந்ததை அறியவில்லை
கறுப்பான உலகம் என்றாலும்
கவலையின்றி காலம் கழித்தேன்

அம்மாவின் உடல் சூட்டில்
ஆனந்தமாய் உறங்கி
அவளின் உதிரமை
உணவெனவே பருகி
அன்பை மட்டுமே
அனுதினமும் உணர்ந்தேன்



கவிஞர் பரிமளா மணி, தியத்தலாவ (இலங்கை)

# ஆகச்சிறந்த பொருத்தம்

திறமையுடன் ஒழுக்கம்
உயர்வுடன் பணிவு
அறிவுடன் அமைதி
வலியுடன் புன்னகை
தோல்வியுடன் முயற்சி
வெற்றியுடன் தன்னடக்கம்
மாற்றுக்கருத்துடன் ஒற்றுமை
நம்பிக்கையுடன் புரிதல்
கண்டிப்புடன் அன்பு
காலத்துடன் உழைப்பு
இருப்பதுடன் மகிழ்ச்சி



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

விற்காத மட்பாண்டங்கள்
வயிற்றை பிசைந்து கொண்டு
இருக்கிறான் குயவன்!

சுற்றியடிக்கிறது வாழ்க்கை
மண் வைத்து பிணைய
சுற்றிவிடும் சக்கரமாக!

சுட்டு வைத்தாலும்
சுடாமல் வைத்தாலும்
மழை வந்தால் பாதிப்புதான்
வெட்டவெளி சந்தையில்!

யார் உடைத்தாலும்
மண்குடம் தான்
ஏழைகள் வீட்டில்!

வண்ணம் தீட்டி
செய்து வைத்த கடவுள்
யாரேனும் விலைக் கொடுத்து
வாங்கி சென்றால் தான்
அருள் கிடைக்கும்
பொம்மை தொழிலாளிக்கு!




கவிஞர் கவி. சுகிரத்னம் (இர. தியாகராசன்)

# கற்றது கைம்மண் அளவு



பரந்து விரிந்தது
பரவச உலகம்.
திரிந்து பறக்கும்
எண்ணத் திலகம்.

பேராசை மனதால்
கோட்டைக் கட்டி.
நிராசை யாகிடவே
உடையும் நெஞ்சச்சட்டி.

குண்டூசித் தலையோடு
குதூகளம் போடும்.
உண்டிட எறும்புக்கூட்டம்
நில்லாமல் ஓடும்.

கற்றிட கற்றிடவே
ப(சு)ற்றிடும் அறிவு.
அனைத்தும் தெரிந்தால்
அறிவுலர் செறிவு.

எல்லாம் தெரிந்த
ஏந்திலர் இல்லை
சொல்லுக்கடங்கா கற்றல்
சுற்றத்தில் உண்டு.

புள்ளினத்தில் கூட
கற்றல் பாடமுண்டு
பள்ளியில் கற்காத
பட்டறிவும் உண்டு.

அனுபவ அறிவு
வாழ்வியல் தெளிவு.
பனுவளின் அறிவு
பார்ப்புகழ் களிப்பு.

கற்றல் அறிவால்
தலைக்கனம் இல்லாது
கற்றதுகை மண்ணளவென
மனதினில் உணர்வோம்.

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி

# மனதின் கண்கள்!

உடல் அலுப்பும்
மன அழுத்தமும்
உதவாத கவலைகளும்
கலவையான சிந்தனைகளும்
ஒய்வுக்கான ஏக்கமும்
இயந்திரமான வாழ்க்கை சூழலும்
உயர்மின் கோபுரத்தின் உயரமாய்
உருவக் குத்தி இழுப்பதேனோ

இந்த பயணம்
இந்த வாழ்வு
இருப்பின்றி இருப்பது
இலக்கை அடையவா
காட்டாற்று வெள்ளமாய்
இலக்கின்றி செல்லவா
வாசல்கள் எல்லாம் திறந்திருக்க
வழியின்றி மனம் தவிப்பதேனோ

ஒரு வழி
ஒரு பயணம்
ஒரு இலக்கு
ஒரு மனம்
ஒரு குட்டி ஓய்வு
ஒரு குட்டி தூக்கம்
இயற்கையோடு இணைந்த பயணம்
இவையாவும் வாய்க்குமா

சிந்தனை சிதறல்கள்
சற்று ஒருமித்து பயணிக்குமா
வினாக்களோடு ஓய்வில்லா இப்பயணத்தில்
விடை அறிந்தவர் யாருளர்
இறைவனின்றி!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# வேரோடிய வாழ்வு!

ஆழமாய் வேரோடிய மரங்களே, வீழாமல்
தழைத்திருக்கும்! அடித்தளம் உறுதி எனில்
வாழ்க்கை அழகாகும்! புவியோடும்,, இயற்கையோடும்
பண்பாட்டோடும், குடும்ப உறவுகளொடும் எந்நாளும்
இணைந்து வாழ்வதே வேரோடிய வாழ்வாகும்!
உண்மை, நம்பிக்கை, பண்பாடு இவைகளோடு
ஒன்றிணைந்த செயல்பாடே வாழ்வினை சிறப்பிக்கும்!
மாற்றங்களுக்கு உட்பட்டதே வாழ்க்கை என்றாலும்
ஏற்றம்தரும் பண்புகளை எந்நாளும் கைவிடாமல்
போராட்டங்களை எதிர்கொள்ளல் வேரோடிய வாழ்வாகும்!
வேரூன்றிய விருட்சங்கள் புயற்காற்று, பேய்மழையை
போராடித் தாங்கியேதான் பல்லாண்டு வாழ்ந்திருக்கும்!
பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்வினிலே
சிறப்புற வாழ்தலே வேரோடிய வாழ்வாகும்!
நற்செயல்கள் செய்வதனால் நற்பலன்கள் கிட்டிடுமே!
ஏற்றி விட்ட ஏணிகளை எந்நாளும் மறவாமல்
போற்றி வாழ்தலே நல்வாழ்க்கை என்றுணர்வோம்!
வேரோடிய வாழ்வே வீழாமல் நிலைத்திருக்கும்!




கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# காத்திருப்பு

கார்த்திகை திங்கள் அழைக்கிறாள்!
கார்மேகம் கொண்டு உலகை வலம் வர!
கழுவப்படாத மனங்கள் கழுவப்படட்டும்
காத்தருள்வான் கருணையுடன் ஏகன்!

காலை தொடங்கி மாலை வரை காத்திருப்புக்கள்
கடைசிவரை தொடர்ந்து
கலியுகம் காணுமா?




எதுவும் நிஜமில்லை
எதுவுமே நிரந்தரமில்லை
எதை நீ கொண்டு வந்தாய்
கொண்டு செல்ல?
ஆசாபாசங்களுக்கு அடிமையாகி
உலக மாயையில் மிதக்கிறாய்!
எப்போ விடுதலை அடைய நினைக்கிறாய்?

விநாடி நொடி கூட நமக்குச் சொந்தமில்லை
வீணாக எதையும் தேடி அலையாதே!
ஞானத்தை தேடிடு
ஞாலத்தில் வாழ வழி சொல்லும்!

கார்மேகம் உன் குற்றம் களையட்டும்
கார்த்திகை திங்களும் பூக்கட்டும்
காத்து வழி சமைத்த ஏகனுக்கு
காலமெல்லாம் புகழ்பாடி
காத்திருப்போம் இனிவரும் நாளை எண்ணி!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

தன்னியல்பாகவே
வளரட்டும்
வீரியத்துடன்
தயவுசெய்து
அதன் போக்கிலே
விட்டு விடுங்கள்



விதையை
பொத்துக்கொண்டு
மண் விலக்கி
மேலெழும்பிய தளிர்
துளிர்த்து
வளராமலா போய்விடும் !

தண்ணீர் ஊற்றுவது
உரமிடுவது
சருகுகளை அகற்றுவது
காவலிருப்பது
மட்டுமே
நமக்கான கடமைகள்

திசைகளை
தீர்மானிப்பதும்
கிளைகள் பரப்புவதும்
மணம் வீசிக்கொள்வதும்
அவைகளே
பார்த்துக்கொள்ளும்

இங்கு
நகல்கள் தேவையில்லை
அசல்கள்
மட்டுமே தேவை
அதுவே
உயிர்ப்பின் உன்னதம்.


கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# ஏன்?

வலிகள் நிறைந்த வாழ்க்கையில்
எண்ணங்களின் பிம்பங்கள் ஆயிரம்
தினம் ஒரு தொடர்கதையாய்
தொடாமல் தொடர்கிறது
ஒவ்வொருவர் வாழ்க்கையிலும்
ஒப்பற்ற காவியமாய்
அவர் நம்பிக்கை ஒன்றே நாளை
அனைத்தும் மாறும் என்ற பிம்ப ஓட்டத்தில்
ஓய்வில்லாமல் ஒவ்வொரு மனிதனும் ஓடுகிறான்
அவன் தேடலை நோக்கி
ஏன் இந்த வாழ்க்கை? ஏன் இந்த நிலை
கேள்விகள் மட்டுமே
ஒரு நாள் உன்னை வெல்லும்
அது சொல்லும்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# நிறம் மாறும் மனிதர்கள்

புறம் கண்டு அகம் காணாது
பன்னிறம் கொண்ட பச்சோந்தி
தேவையின் போது தேனாய் இனித்திடும்
தேடல்கள் இல்லையெனில் பாகாய் திகட்டிடும்

அளவு மீறிய விஷத்தை அமுதமாய் சுரந்து
இங்கே நடித்திடும் முகமூடி
வசதிகள் இருந்து விட்டால்
அட்டையாய் ஒட்டிக்கொண்டு
உறிஞ்சிடும் அத்தனையும்

பாழ்கிணற்றில் விழுந்து விட்டால்
எட்டிப் பார்க்க கூட
மனமின்றி எட்டா தொலைவில் அவர்கள்

நாம் சிறகொடிந்து கிடக்கையிலும்
அவர் சிட்டாய் பறந்து வடித்திடுவர்
வசைச் சொல்லை

எல்லா வகை முகமூடிகளையும்
அணியத் தெரிந்தவர்கள் அவர்கள்
பற்பல வண்ணங்கள் பூசினாலும்
தகரம் என்றும் தங்கமாவதில்லை

தேவைகள் இல்லையெனில்
இவ்வுலகில் தேடல்களும் இல்லை
துரோகம், ஏமாற்றம், இழப்பு,
கண்ணீர், வலி, வசை, பழி

இவை யாவும் வாழ்வு எனும் உளி
உன் மீது நிகழ்த்து உரிமைத் தாக்கம்
அனைத்தையும் கடந்து உன் பிம்பத்தை பார்
நீ அற்புத சிலையாக இருப்பாய்



காலணவன் கணக்கு பொய்த்துப் போனாலும்
காலத்தின் கணக்கு என்றும்
பொய்த்து விடுவதில்லை
நிலை கெட்ட மனித மனம் என்றும்
நிறம் மாறும் பச்சோந்திகளே

கவிஞர் சஜிரேக்கா சுதாகரன், திருகோணமலை (இலங்கை)


புலியகுளம் மாரியம்மன்
திரிசூலம் கையில் ஏந்தி வீற்றிருக்கிறாள்
வாழ்வில் வரும் வல்வினைகளை விரட்டுபவள்
தர்மம் தலைகாக்க புலியகுளம் மாரியம்மனை
வணங்கினால் மனம் இறங்கி வந்து
கண்முன் காட்சியளிப்பவள்
திரிபுரசுந்தரி திரிபுரத்தை எரித்தவளே
மாரியாக பொழிக
புலியகுளம் மாரியம்மன்
பக்தர்கள் குறையை தீர்த்து வைப்பவள்
புலியகுளம் மாரியம்மன் மகமாயி
பட்டு வண்ண சேலை உடுத்தி
பவனி திருவீதி உலா வருகிறாள்
தேடி வரும் பக்தர்களை காக்கும் ஆதிபராசக்தியே
ஆத்மநாயகியே ஆனந்த ரூபினியே
கண் குளிர காண வேண்டும்
ஆதிசங்கரியே சாம்பிராணி வாசகியே
மனம் இறங்கி வந்து
பக்தர்கள் குறையை நீக்கி விடு அம்மா
அரசியாக ஆலயத்தில் கருவறையில்
புலியகுளம் மாரியம்மன் வீற்றிருக்கிறாள்
ஜோதியாக காட்சி தருபவள் கண் முன் வருபவள்
புலிய குளம் மாரியம்மன்
வாழ்வில் வரும் தடைகளை நீக்கி விடுவாள்
வறுமைகளை போக்கி வாழ்
வாங்கு வாழ வைப்பவள்
தேவர்களும்,ரிஷிகளும் அம்மனை தேடி வரும்
ஆற்றல் கொண்டவள்
அம்மை நோய் உள்ளவர்களை
கோவிலுக்கு அழைத்து வருவார்கள்
முத்தைக் கொடுப்பவள்
முத்தை எடுப்பவள் சக்திதான்



புலியகுளம் மாரியம்மன் கோவிலில்
பூப்போட்டு பார்ப்பார்கள்
பார்த்த பிறகு தான்
நல்ல காரியங்கள் செய்வார்கள்
நாக சிலைகள் ஒன்பது காணப்படுகிறதே
ராகு கால தோஷம் செவ்வாய்தோஷம் நீங்கும்
புலியகுளம் மாரியம்மன்
மனதார வேண்டிக்கொண்டால்
நினைத்த காரியம் கைகூடும்
புலியகுளம் மாரியம்மன் தாயே
என்னை முன் வந்து காத்து விடு.

கவிஞர் மா. நந்தினி, சேலம்

# அண்ணல் காந்திஜி



அண்ணல் காந்தி உத்தமசீலராவர்
அகிம்சைவழியை இந்தியருக்கு உணர்த்தினார்
தன்னலம் இல்லா வாழ்கையினை வாழ்ந்தார்
எளிமை வாழ்வினை வாழ்ந்துக் காட்டினார்
சத்தியசோதனை எழுதிப் புகழடைந்தார்
சத்தியம் தவறாமல் வாழ்வை மேற்கொண்டார்
அந்நியர்கள் ஆட்சியை அகற்றவும் செய்தார்
இந்தியர் சுதந்திரம்பெற வாழ்வை அர்ப்பணித்தார்
தேசம் காத்த உத்தமர் அண்ணல் காந்தியார்
தேசப்பிதாவாய் இந்தியர்களால் போற்றப்பட்டார்
எளிமையை வாழ்வினை என்றும் கடைபிடித்தார்
இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்குமென்றார்
அந்நிய பொருட்களை உபயோகிக்க வேண்டாமென்றார்
அனைவரையும் அரவணைத்து அறப்போர் புரிந்தார்
காதி ஆடைகளை உடுத்திட வலியுறுத்தினார்
காலத்தால் அழியாப் புகழ் தேடி வந்தது
காந்தி காட்டிய வழிகளை நாமெல்லாம்
காலம் முழுக்க கடைபிடிதிடுவோம்
சுதந்திர காற்றை அனுபவித்திடுவோம்
சுயநலம் அகற்றி ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவோம்!

கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

குரங்கிற்க்கு வாலை அளக்காமல் வைத்தான் கடவுள்
ஆட்டிற்கு நீங்கள் அறிந்த ஒன்றே
***

காபியின் கடைசி துளி கூடுதல் இனிப்பளிப்பது போல தான்
பிரிவின் கடைசி முத்தம்
***

Remote வேலை செய்ய வில்லை என்றால்
நான் தட்டி கேட்பேன்
***

சீர்திருத்த பள்ளியில் படிக்க விரும்புகிறேன்
எனக்கு தலைமை ஆசிரியராய் பெரியார் வேண்டும்
***

7 ஆம் வாய்பாடை எங்கு பயன்படுத்தினாலும் காரணம்
ராதா டீச்சர் தான்
***

இன்முகம்
இனிப்பு வழங்கலுக்கு நிகர்
***

மூக்கு கண்ணாடி குடுவையில்
காட்சிகள் அடைப்பட்டு கிடக்கின்றன
***

உப்பிட்டவரை
உப்பு நீர் வந்த பின் நினை
***

கூப்பிட்டு கேள்
கும்பிட்டு கேட்காதே
***

ஈ மொய்க்கும் புண்கள்
சுகமானவை



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

## ஞாபகம் இல்லா பொழுதுகளில்

மனதுக்குள் செல்லும்
திரை இசை

புத்திக்கு செல்லும்
பாடல் வரிகள்

உள்ளம் உவகையாகி
கண்ணில் நீர் வர ரசிக்கும் நகைச்சுவை

மனிதநேய சேவை அறிந்து
சமூகம் பற்றிய நல்லஎண்ணம்


மற்றவரின் சிறப்பான
பேச்சுக்கும் செயல்பாட்டுக்கும்
பாராட்டு

இத்தனையும் நேற்றைய
தோல்வியின் வருத்தமும்

நாளைய பற்றிய
பயமும் பதட்டமும்

ஞாபகம் இல்லா பொழுதுகளில்...

*****



## அதை சொல்கையிலே...

நம்பிக்கையாய்
கேட்கப்பட்ட உதவிக்கு
இல்லை என் கையில்
சாதகமாகும் என
எதிர்பார்க்கப்பட்டது
இல்லை என் கையில்

பிடித்தமான உணவு
வைத்திருந்தேன்
இப்பத்தான் கொடுத்தேன்
என் கையில்
கால தாமதமான
தவறான தகவல்
கொடுக்கப்பட்டும்
மன்னிக்கவும்
கேட்கப்படுகையில்

பேசிக்கொண்டே இருந்தவர்
அவசர அழைப்பு
அப்புறம் பார்ப்போம்
என்கையில் வெளியே
உதட்டு வார்த்தையாய்
பரவாயில்லை
உள்ளே
சொல்லில் அடங்கா
வருத்தம்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

" என்ன நரேன்... என்ன.. செய்வதாக உத்தேசம்..?" கொஞ்சம் பயத்தோடு கேட்டான் வசந்த்.

"என்ன விசயம்..இவ்வளவு பயப்படுகிறாய்?.. " அசாதரணமாக கேட்டான் நரேன்.
அவன் சாதாரணமாக சொல்லிக்கொண்டிருப்பதை பார்த்து, நரேனைத் திரும்பிப்பார்த்த.. வசந்த்.., "நீ உறுப்படரவன் மாதிரி தெரியல.." என்று கொஞ்சம் பல்லைக்கடித்தான் வசந்த்..

" நரேன், என்ன தான் பண்ணிகிட்டிருக்கே.." திரும்பவும் கேட்டான் வசந்த் .

தூரத்தில் மின்சாரம் செல்கின்ற. நீள கம்பியில் அமர்ந்திருந்த அந்த புறா ஆடி ஆடி அமர்ந்திருந்தவாறு தன் அலகால் உடலில் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்ததை, அதன் கழுத்துப்பகுதியில் சூரியக்கதிகள் பட்டு மின்னிக்கொண்டிருப்பதைக் கண்டு அந்த அழகில் லயித்து ஆழ்ந்து போயிருந்தான் நரேன்.

"எதிரே காவல் துறை வண்டி நின்று கொண்டிருக்கிறது... நீ ... நீ .. இப்படி புறாவைப் பார்த்துக்கொண்டு..." தலையிலடித்தான் வசந்த்.

" அடப் போடா... அந்தப்புறாவைப் பாருடா.. எவ்வளவு அழகாக கழுத்தை வளைத்து அதற்கு .... அந்த கழுத்துப்பகுதியை பார்டா.. என்ன அழகா சூரிய வெளிச்சத்தில.. பிரகாசிக்குது... இரசிக்கத் தெரியணும்டா... " என்றான் நரேன்.
"ஆமாமாம்.. இரசிக்கத்தெரியணும் தான்... இன்னும் கொஞ்ச நேரத்திலே இந்த போலீஸ் காரங்க.. நம்மகிட்ட வரப்போறாங்க... " என்று திரும்பவும் நெற்றியில் அடித்துக் கொண்டான்.

"ஏண்டா இப்படி உயிரை வாங்குற... நாம் அரசாங்க வேலையில இருக்கிறவங்க.. போலீஸ் வந்து கேட்டா .... கேட்டதுக்கு பதில் சொல்லி விட்டுப் போறோம்.." என்று முடிப்பதற்குள் காவல் துறை வண்டியிலிருந்து இறங்கிய காவலர் ஒருவர் வந்து"எங்கே போறீங்க?" என்று கேட்டார்.

"சார்.. நாங்க இங்க கொஞ்சம் பச்சிலை மருந்து தேடி வந்திருக்கிறோம். நாங்க அரசாங்க ஊழியர்கள்" பையிலிருந்து அடையாள அட்டையை எடுத்து நீட்டினான் நரேன்.

"ஓ... அப்படியா! நீங்கள் அடுத்த கேட் வழியா உள்ளே போங்கள். " என்று கையை காட்டினார்.

" சார். இங்க என்ன பிரச்சினை?" என்று கேட்டான் வசந்த்.

" யாரோ சினிமா காரங்க வந்து மானை வேட்டையாடியிருக்காங்க.. மான் செத்து கெடக்குது.. வேட்டையாடுனவங்களைக் காணோம்... நீங்க யாரையாவது பார்த்தீங்கண்ணா தகவல் குடுங்க.. காவல்துறை உங்கள் நண்பன்" என்றார் அதிகாரி.

"சரி சார்... கண்ணன் காரைத்திருப்பு.. " என்றான் வசந்த்.

" காவல்துறை உங்கள் நண்பனாம். கெடச்சா கிழிச்சிருவாங்க.." என்றான் கண்ணன்.

"ஏய்... அவனவன் பிரச்சினை அவனவனுக்கு.. காரை கவனமாக ஓட்டு" என்றான் வசந்த்.

அடுத்த நுழை வாயிலுக்கு வந்த போது.. " காட்டிலாகா அதிகாரி உட்கார்ந்திருக்கிறார்" என்றான் கண்ணன்.

"இருக்கட்டுமே.." என்று சொல்லி விட்டு காரிலிருந்து இறங்கிய நரேன், காட்டிலாகா அதிகாரி அருகில் வந்து தாங்கள் வந்த காரியத்தை விளக்கிய போது "தாராளமாய் போங்கள்... கொஞ்சம் கொடிய மிருகங்கள் இருக்கும். கவனமாகப் போங்கள்" என்றார்.

நரேன் திரும்ப வந்து காரில் ஏறிக்கொள்ள, கண்ணன் "எப்படி சார் போகணும்?" என்று கேட்டான்.

வசந்த் திரும்பிப்பார்த்து விட்டு" கண்ணன்... கொஞ்சம் வலது பக்கம் போய் காரை நிறுத்து..." என்றான்.

"என்ன?" எனக் கண்களால் கேட்டான் நரேன்.

"அனேகமாக.. நாம் தேடி வந்த செடி இதோ இங்கே தான் இருக்கிறது போல..." என்றான் வசந்த்.
காரை நிறுத்தியதும், வசந்தின் பின்னால் இறங்கிய நரேன்" என்ன விளையாட்டு இது.." என்றான்.

அவனைத் தனியாக அழைத்துக்கொண்டு போய் " கண்ணன் கூட இருந்ததானால் தான் கேக்கல... நான் படம் போட்டு இந்த கேட்டிலிருந்து ஏழு கிலோ மீட்டர் தூரத்துல போய் அங்கே ஒர் பழைய சித்தர் கல்லறை கிட்டே..." என்ற நரேனைப் பேச விடாமல் தடுத்து அழைப்பு வந்ததும் போனை எடுத்து,"கவிதா சொல்லு" என்றான் வசந்த் .

எதிர்முனையில் " ஏய்.. என்னடா.. இன்னும் நீங்க.. காட்டுக்குள்ளேயே போகல்ல போலருக்கு.." என்றாள் கவிதா .

"இது என்ன.. எடுத்தோம் கவிழ்த்தோம்ணு செய்யற விசயமா?. அம்மா மெதுவாகத்தான் மூவ் பண்ண முடியும்"

"சரி.. சரி.. எங்க இருக்கிறீங்க.."

"காட்டுக்குள்ளே போறதுக்குத்தான் கிளம்பினோம்.. அதுக்குள்ள ஆயிரம் பிரச்சினைகள்... என்ன செய்தி... என்ன அவசரம்? அதச்சொல்லு மொதல்ல.."

"போனை கொஞ்சம் நரேன் கிட்ட குடு..." என்றாள் எதிர்முனை கவிதா..

"இந்தா.. காதலிக்கிறது என்னை ... ஆனா உங்கிட்ட தான் பேசணுமாம்" என்றவாறு அலை பேசியை நரேனிடம் கொடுத்தான் வசந்த்.

அலை பேசியை வாங்கிய நரேன்," சொல்லு. கவிதா. என்ன செய்தி?" என்றான்.

"நெய்லி கிட்டே பேசிக்கிட்டிருந்தேன்.. அது தான்.. நீங்கள் தங்கியிருக்கும் விருந்தினர் மாளிகையிலிருந்து ஒம்பது கிலோ மீட்டர் தூரத்திலே தான் நாம தேடிக்கிட்டிருக்கிற அந்த செடியிருக்கு தான். நீங்க.. அந்த சித்தர் கல்லறை கிட்டே தானே போய்க்கிட்டிருக்கீங்க.." சாந்தமாக கேட்டாள்

"இங்க நாங்க.. அவசரமாக இருந்துகிட்டிருக்கோம்... நீ வேற... நான் எல்லாம் நெய்லிகிட்டே பேசியாச்சு.. சாயங்காலம் நாங்க திரும்பி வந்த பிறகு கான்பரன்ஸ் கால்லே பேசலாம்." எரிந்து விழுந்தான் நரேன்.

""சரி.. சரி.." என்று தொடர்பைத் துண்டித்தாள் கவிதா.

"இவ்வளவு சிரமப்பட்டு பிளான் பண்ணி வந்தா.. இங்க... என்ன தாண்டா பண்றீங்க.." சலித்துக்கொண்ட நரேன் ," ஏன் வசந்த் காரை நிறுத்த சொன்ன..?" எரிச்சலும் கோபமும் கொண்டவனாக கேட்டான்

" அந்தச் செடியிலே ஏறக்குறைய... நாலு பூ... நாலும் நாலு நிறத்திலே இருக்கும். அப்படித்தானே..." வசந்த் கேட்டான்.

"ஆமா... நாலு பூவும் நாலு விதமா இருக்கும்.. அதாவது ஒரு பூ முல்லைப்பூ மாதிரி இருந்தா இன்னொரு பூ செம்பருத்தி பூ மாதிரி இருக்கும். முல்லைப்பூ வெள்ளையா இருக்கும். செம்பருத்தி பூ மஞ்சள் நிற்த்திலே இருக்கும்.இன்னொரு பூ சூரிய காந்தி பூ மாதிரியும் அது சாம்பல் நிறத்திலேயும் இருக்கும். இன்னொரு பூ தாமரைப்பூ மாதிரியும் அது இளம் நீல நிறத்திலே இருக்கும்.ஆனா எல்லாப்பூவும் ஒரே செடியிலே தான் பூக்கும்." விவரித்தான் நரேன்.

"அதே மாதிரி ஒரு செடியிலே விதவிதமா பூப்பூத்திருக்கிறத பார்த்ததனால தான் காரை நிறுத்தி இறங்கச் சொன்னேன்" என்றான் வசந்த்.

"அதெப்படிடா இருக்க முடியும்.. நாம ரெண்டு பேரும் தானே வாசித்துப் பார்த்தோம். அந்தக்கல்லு போட்டிருக்கிற இடத்திலேயிருந்து ஏழு மைல் கல் தொலைவிலே சித்தர் கல்லறையிருக்கு.. அந்த கல்லறை பக்கத்திலே"... என்ற நரேனை இடைமறித்து..."நான் பார்த்தேங்கிறனில்லையா... அதைப் பார்த்து விட்டுப்போய் விடலாமே?" என்றான் வசந்த்.

"சரி.. எங்கே பார்த்தாய்?" என்று கேட்டான் நரேன்.

"நம்ம அந்த கேட்டை விட்டு உள்ள வந்தவுடனே இடது பக்கம் பார்த்தேன் நீ விவரித்த மாதிரி கொஞ்சம் நெறைய பூ ஒரு செடியிலே இருந்த மாதிரி பார்த்தேன்" என்றான் வசந்த்.

"டேய்... ஏற்கனவே நேரம் வீணாகிக்கிட்டிருக்கு"

"ஆமா .. இவரு புறாவை இரசிக்கும்போது மட்டும் நேரம் வீணாகலை..." கடுகடுத்தான் வசந்த்.

"சரி .. வா.." என்று இருவரும் காருக்கு வந்தனர்.

"எங்க சார் .. போகணும்?" என்றான் கண்ணன்

"திரும்ப நம்ம வந்த வழியா போப்பா.." என்றான் வசந்த்.

வசந்த் சொன்ன இடத்திற்கு வந்த அவர்கள் இருவரும் வசந்த் சொன்ன இடத்தை நோக்கி நடந்தனர்.

"எங்கடா பாத்தே..." என்று கேட்டான் நரேன்.

"இதோ அந்தப்பக்கம் அந்த செடியைப் பார்" என்றான் வசந்த்.

நரேன் திரும்பிப் பார்த்த போது அங்கே ஒரு நாகப்பாம்பு படம் எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி வந்தது

தொடரும்...

குருட்டு மலை(புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம்)




தினமும் தூங்க போகும் போது இளைய மகன் கதை சொல்லுங்கப்பா என்று என்னிடம் கதை கேட்கும் வழக்கம் உண்டு,

அதிக கதைகள் நான் வாசித்தாலும் அவை நினைவில் நிற்பது இல்லை,
இப்படி இருக்க முகநூல் மற்றும் நூலில் படித்தக் கதைகள் அல்லது யாராவது சொன்ன கதைகள் என ஏதோ ஒரு கதை யைச் சொல்லி தப்பித்து விடுவேன், நிலைமை இப்படி இருக்க சில நேரங்களில் எனது சொந்தக் கதைகளையும் சொல்வது உண்டு.

இரண்டு மாதத்திற்க்கு முன்பு ஒரு முறை தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ளக் குருட்டு மலையை ப் பற்றி எனக்குத் தெரிந்த செவி வழிக் கதைகளை மகனுக்கு சொன்னேன்,

கடந்த வாரம் ஊருக்குச் செல்லும் போது
"அப்பா என்னையும் குருடி மலைக்குக் கூப்பிட்டு போய் காட்டுங்க " அப்படின்னு சொன்னான்

"ஏல அது குருடி வாழ்ந்த குருட்டு மலை " என்று சொன்னேன் நானும்

" கண்டிப்பா குருட்டு மலையை காண்பிககிறேன் " என்றேன்

சில நேரங்களில் அரிதாக யாரிடமாவது ஒரு வேலையை செய்கிறேன் என்று சொன்னால் ஏதோ ஒரு முயற்சி மட்டும் செய்து பார்ப்பேன்,

சரி இரண்டு மகன்களையும் கூட்டிக்கொண்டு கீழக்கூட்டுடன் காடு சாலை வழியாக ராஜிவ் நகர் வந்ததும். குருட்டு மலைக்குச் செல்ல வழி தெரியாமல் சரி யாரிடம் கேட்கலாம் என யோசித்துக் கொண்டிருக்கும் போது இரண்டு சிறுவர்கள் சைக்கிள் இல் வந்தார்கள்.

" தம்பி குருட்டு மலைக்கு எப்படி போகனும்? "

" நேரா போயி ரைட்டு லே போங்க,, ஆனா வண்டில போக முடியாது, நடந்து தான் போகனும் "

"அது சரி குருட்டு மலை இருக்கா?"

"ஆ இருக்கே" என்று சொல்லிக் கொண்ட சிறுவர்கள் சைக்கிள் சென்று கொண்டே இருந்தது"

சரி முப்பது வருடத்திற்க்கு முன்பு வந்தது. பாதை எப்படி ? , சரி போய் தான் பார்ப்போமே.

அம்மா எனக்கும், அண்ணனுக்கும் பொங்கலுக்கு மறுநாள் இங்க தான் போயிட்டு வர சொல்லி அனுப்புவாங்க, கரும்பு, வாழைப்பழம்,,பனங்கிழங்கு எல்லாம் கூடையில் கொடுத்து அனுப்புவாங்க என என்றும் மாறாத அந்த பசுமை நினைவுகளை சுமந்தவாரு மலை ஏறினோம். அந்த குருடி வாழ்ந்த இடத்தையும்(குகை), குருடி விளையாடிய பல்லாங்குழியையும் மகன்களுக்குக் காட்ட டூரிஸ்ட் பிலேஸ் ஆனது அந்தக் புதுக்கோட்டையின் குருட்டு மலை.

உச்சி வெயில் மண்டையை பிளக்க, குருட்டு மலையைப் பற்றியக்கதையில் மூழ்கினோம், கூடவே வெடிவெடிச்சான் கிடங்கு இங்கே தான் பக்கத்தில் இருந்தது. ஆனால் இப்போ அது இல்லை.

அப்போது ஒரு முறை நான் வெடிவெடிச்சான் கிடங்கில் குளிக்கும்போது நான் மூழ்க பார்த்தேன் அந்தகதையையும் சேர்த்து சொன்னேன்.
எப்படியோ குருட்டு மலையைப் பற்றிய கதைகள் அடுத்த தலைமுறைக்கு கடந்தப்பட்டது,

மீண்டும் நினைவுகளை சுமந்துகொண்டே மலை இறங்கினோம்.

"ஏங்க நீங்களும் வாய்ப்பிருந்தால் குருட்டு மலைக்கு வாங்க,"

தூத்துக்குடியிருந்து திருநெல்வேலி செல்லும் சாலையில்

( புதுக்கோட்டை நிறுத்தம் )
கீழக்கூட்டுடன் காடு பிரிவு



நிழல்களில் நடக்கும் தேடல்

ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒரு திருப்பம் அவசியம் உண்டு. அது எப்போது, எதில், எத்தனை வலியோடு வருமென்று யாருக்கும் தெரியாது.



நடந்து முடிந்ததை நினைவுபடுத்துவது சிலநேரம் நிம்மதி தரலாம், ஆனால் அதையே நாள்தோறும் சுமையாக சுமந்து செல்லும் போது, வாழ்வின் ஓட்டமே நின்றுபோவதுபோல் தோன்றும்.

திருப்பம் சில நேரங்களில் கடினத்தை கரைக்கும் சந்தோஷமாக வரும், சில வேளைகளில் இன்பத்தை குழைக்கும் துன்பமாகவும் வந்து விடும்.

அதுவே வாழ்க்கையின் பாடம் - ஒவ்வொரு திருப்பமும் நம்மை நமக்கே கற்றுத்தருகிறது. எதை நம்பலாம், எதை விட்டுவிடலாம் என்பதை உணர்த்துகிறது.

சில நேரம் துயரம் நம்மை தனிமைக்குத் தள்ளும். அந்த தனிமையின் துணைவனாக நிழல் மட்டும் இருக்கும். நம்மோடு அமைதியாக நடக்கிறது அது, நம் சொற்களைக் கேட்காமல் இருந்தாலும், நம் மௌனத்தைப் புரிந்துகொள்கிறது. அந்த நிழல் நம்மை நினைவுகளின் வழியே அழைத்து செல்கிறது. நாம் விழுந்த இடத்தையும், நிமிர்ந்த இடத்தையும், நம்பியவர்களால் காயம் பெற்ற வேதனையையும்.

ஒரு கட்டத்தில், அந்த நிழலே நம்மை நம்மிடமே திருப்பிவிடுகிறது. "வாழ்வை இழக்காமல் வலியை தாங்கிக்கொள்," என்று சொல்லும் ஒரு மென்மையான குரல் அதில் உண்டு.

கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

தேடல் - 07

நிழல்களில் நடக்கும் தேடல் என்பது, உண்மையில் வெளிச்சத்தை நோக்கும் பயணம் தான். அதன் முடிவில் நம்மை நாமே காண்கிறோம். புதிய நம்பிக்கையுடன், பழைய காயங்களை மன்னித்து, வாழ்வை மீண்டும் தொடங்கும் தைரியத்துடன் எழவேண்டும்.



கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

மா. செல்வகுமார் ; வெளியீடு மௌவல் பதிப்பகம்
முதல் பதிப்பு செப்டம்பர் 2025 ; பக்கம் 146 ; விலை ரூபாய் 170

#எளியவர்களின் வழியே உயிர்பெறும் ஏற்றமிகு சிந்தனைகள்.




கதைகள் காலத்தின் போக்கை கணிக்கவல்ல பேரதிசயமாகக் கருதப்பட்ட தருணங்கள் உண்டு. கதைகளின் வழியே வரலாற்றை அறிந்த தமிழினம் கதைகளினூடே தன்னை வளர்த்துக்கொண்டு வந்திருக்கிறது. வாழ்வியலை, வாழ்தலின் நகர்தலை, சமூகத்தின் இருப்பை, தனி நபர்களின் பொறுப்பை, தேசத்தின் மீதான மனிதர்களின் நேசத்தை, குடும்பத்தை பராமரிப்பதன் அவசியத்தை என கதைகள் அவனை வழிநடத்திச் சென்ற பொழுதுகள் ஏராளம். அத்தகு கதைகளுக்குள் தன் மண் சார்ந்த அனுபவங்களையும் தன் வட்டாரம் சார்ந்த செயல்பாடுகளையும் இணைக்கும் போது ஒவ்வொரு எழுத்தாளனுக்குள்ளும் புதிய புதிய கருக்கள் உற்பத்தியாகின்றன. வாழ்வின் அடையாளம் நூலின் வழியாக எளிய மனிதர்களின் உணர்வுகளையும் அவர்களுக்குள் உறைந்து கிடந்து வெளிப்படும் குண நலன்களையும் நேர்மறை எண்ணங்களுடன் இணைத்து 15 சிறுகதைகளை கவிஞர் செல்வகுமார் எழுதியிருக்கிறார்.

ஒவ்வொரு கதையும் பல அறச் செயல்பாடுகளை நமக்குள் நுழைய வைத்து விடுகின்றது. இந்த சிந்தனைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகவும் மாறி நிற்பது சாலச் சிறந்தது.

#உடனடிச்சேவை

அரசு மருத்துவமனைகளில் கிடைக்கும் சேவையைப் பற்றி மக்களுக்கு உணர்த்தும் விதமாகவும் ரத்தக்கொடையாளர்களின் ஈகை பற்றியும் மகனுக்கு வாழ்வின் அர்த்தங்களையும் தாங்கள் கடந்து வந்த பாதையையும் ஊட்டி வளர்க்காத பெற்றோர்கள் படும்பாட்டைப் பற்றியும் இளமைக் கொண்டாட்டத்தில் சமூகத்தையும் குடும்பச் சூழலையும் எண்ணிப் பார்க்காமல் குழந்தைகள் போடும் ஆட்டம் எப்படி அவர்களது வாழ்வில் பாதகங்களை ஏற்படுத்தி விடுகிறது.

#கதம்பம்

அபலைகளைச் சுற்றும் சபல ஆசாமிகள் எப்படியெல்லாம் அவர்களது வாழ்வை பாதிக்கிறார்கள் என்பதன் கதையும் ஆலய தரிசனத்தின் நடைமுறைகளையும் முதலாளிக்கு விசுவாசம் காட்டும் தொழிலாளியின் நேசமென கார் ஓட்டுநரின் செயல்களையும் இக்கதை பேசிச்செல்கிறது.

#நல்லிணக்கம்

ஊரில் திருவிழா நடத்துவதில் உள்ள நடைமுறைகள், பொது நிகழ்வில் இளைய தலைமுறையினரை ஈடுபடுத்தி அவர்களுக்கு அனுபவத்தை பெற வைத்தல், இனம் சாதி அடையாளங்கள் துறந்து பொதுக் காரியங்களில் மக்களின் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் நிலை நாட்டல் போன்ற செயல்பாடுகளை விவரிக்கிறது கதை.

#வாழ்வின்அடையாளம்

நூலின் தலைப்புக் கதையான இதில் மரம் நடுவதை மாபெரும் நிகழ்வாக மாற்றும் மனங்களை அறிமுகப்படுத்தி மனிதப் பிறப்பின் மகத்துவத்தை இயற்கையைப் பேணுதலே அடையாளம் என்பதை நிலை நிறுத்தும் தலைசிறந்த பண்பை வெளிப்படுத்துகிறது. அத்துடன் இயற்கை உணவுகளைப் பின்பற்றுவதில் எதிர்காலம் சிறப்புற அமைவதன் அவசியம், தொடர் முயற்சியும் கூட்டு உழைப்பும் எப்போதும் சிறந்த பலனைத் தரும் என்பதையும் கடமையைச் செய்தால் மட்டும் போதுமல்ல

அதற்கான பாராட்டுதல்களே மேலும் பலரையும் அதை நோக்கி ஈர்த்து விடும் என்பதையும் உணர்த்தி விடும் கதையம்சத்தோடு விளங்குகிறது.

#குழந்தைமனம்

தெரு நாய்களின் தொல்லையிலிருந்து விடுபடும் யோசனைகள் எல்லா உயிர்களையும் மதித்துப் பார்க்கும் கருணையை குழந்தைகள் மனதில் விதைத்தல் குழந்தைகளின் எண்ணங்களில் எல்லோரையும் மதிக்கும் குணங்களை விதைத்தல் போன்ற பண்புகளை அடிப்படையாகக் கொண்டு கருணையை விதைத்துச் செல்கிறது.

#கடற்கரை

ஒன்றுபட்ட உழைப்பு எப்போதும் உயர்வையே தரும். குடும்பத்தின் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றத்திற்கான ஆரம்பப் புள்ளியாக அமையும். 'வானத்தைப்போல' விக்ரமன் படம் பார்த்ததைப் போல எதிர்ப்படும் எல்லோரும் நல்லவராய் இருந்து நமக்குள்ளும் நேர்மறை எண்ணங்களை விதைத்து விடுகிறது கதை.

#செல்லாக்காசு

போதையின் வீரியமும் அறம் தவறிய செயல்களும் மனிதர்களைத் தண்டிப்பதோடு குடும்பத்தையும் நிலைகுலைய வைத்து ஏதுமற்ற நிலைக்கு அவர்களைத் தள்ளி விடுகிறது. கூடா நட்பும் பேராசையும் கேட்டில்தான் முடியும்.

#தொடர்முயற்சி

உழவனின் செயல்பாடுகளும் அவனது வியர்வை உழைப்பும் அவனுக்கு முழுமையானதொரு பலனை எப்போதுமே வழங்குவதில்லை. ஆயினும் லாபம் கிடைக்காத தொழில் என்றாலும் அதை விட்டு விடுவதற்கு எந்த உழவனும் தயாராவதில்லை. தொடர்ந்தது தொடர்ந்து எந்த மண் தன்னை ஏமாற்றுகிறதோ அந்த மண்ணிலேயே தனது உழைப்பை மேலும் மேலும் செயல்படுத்திக் கொண்டே இருக்கிறது

உழவனின் மனம்.. உழவனுக்கு மண்ணும் அரசும் மேன்மையைக் கொடுக்காமல் போனாலும் உழவின் மீதான பற்றும் ஈர்ப்பும் அழியாமல் தொழிலைத் தொடர்ந்து செய்யும் உழவர்களின் மனநிலையை விவரிக்கிறது இந்தக்கதை.

#மெழுகுவர்த்தி

குடும்பத்திற்காகவும் அதன் அன்றாட வாழ்நிலையை நகர்த்தலுக்காகவும் தன்னையே தியாகம் செய்த ஆணின் வாழ்வு முழுமையானதொரு தியாகத்தை பறைசாற்றுகிறது. கடைகளில் புத்தகங்கள் வைத்திருந்து கவிதைத் தொகுப்புகளை வாசிக்கும் காட்சி அமைப்பு இந்த கதையில் மிகச் சிறப்பான திரைக்கதையாக கோர்க்கப்பட்டு இருக்கிறது. இப்போதெல்லாம் எந்த திரைப்படங்களிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும் ஏன் கதை நூல்களிலும் கூட யாரும் நூல்களைப் படிப்பது போன்றோ நூல்களைப் பற்றி பேசுவது போன்றோ காட்சி அமைப்புகளும் இடம் பெறுவதில்லை. நூலிலும் இடம்பெறுவதில்லை. பிறகு எப்படி எல்லோரையும் வாசிப்பின் பக்கம் நாம் அழைத்து வர முடியும் என்ற சிந்தனையையும் இந்தக் காட்சி நமக்குள் ஏற்படுத்திவிடுகிறது..

#சமஉரிமை

பெற்றோர்களின் சொத்துகளில் அவர்களது உழைப்பில் கிடைத்த ஊதியத்தில் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளும் உலகம் பெற்றோர்களின் இறுதிச்சடங்குக்கு பெண்களை அனுமதிக்க மறுக்கிறது என்பதை எப்படி நாம் ஏற்றுக்கொள்கிறோம். அங்கேயும் அவர்களுக்கான சமூக உரிமையை கொடுத்தல் முறை தானே என்ற புரட்சிகர விதையைத் தூவுகிறது கதை.

### #இயற்கையை கைவிட்டுட்டோமோ?

செயற்கை உரங்களின் வரவு மண்ணை மலடாக்கி விட்டு மனிதர்களுக்கு நோய்களைக் கொடுத்து பூமியை முடமாக்கி விடுகின்றன. இயற்கையின் அளப்பரிய கொடையை மனிதன் பேராசையினால் ஒட்டுமொத்தமாக அழிக்கப் பார்க்கிறான். இயற்கையை பேணிக் காக்காமல் எவ்வளவுதான் அறிவியல் முன்னேற்றத்தில் ஈடுபட்டாலும் நோய்கள் பெருகிக்கொண்டே தான் இருக்கும் என்பதையும் மனிதனின் ஆரோக்கியம் சீர்கெட்டுக் கொண்டே போகும் என்பதையும் எச்சரிக்கை செய்யும் இந்தக் கதை இயற்கையைப் போற்றி வணங்குவதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது..

### #மதுச்சாலை

இன்றைய காலகட்டத்தில் மதுவின் கொடூரம் பல்வேறு குடும்பங்களை எவ்விதம் பாதிக்கிறது என்பதையும் சமூக சீர்கேடுகள் எப்படி மலிந்து விடுகின்றன என்பதையும் அதன் தொடர்ச்சியாக கொலைகள் கொள்ளைகள் போன்ற தீய சம்பவங்கள் அரங்கேறுவதன் பின்னணியையும் ஆராயத் தருகிறது மதுச்சாலை கதை.

### #விதையில்லா உலகம்

செயற்கை சுவாசம் செயற்கை மாத்திரைகள் என எதிர்காலத்தில் உலவப்போகும் இன்றைய மனிதனின் இயற்கையை பாழ்படுத்திய செயல்பாடுகளால் எதிர்காலம் எப்படி சிறப்பாக இருக்கும்? உயிரின் தொடக்கமே விதையின் செழிப்பில் இருக்கையில் விதையற்ற உலகில் வேறு என்ன விளையும்?

#வாழ்வியல் முரண்

ஒரு கவிஞன் எப்படி உருவாகிறான்? எத்தகு சூழல் அவனை எழுத வைக்கிறது? என்பதை தனது வாழ்வையே மையக் கருத்தாக கொண்டு எழுத்தாளர் எழுதியிருக்கும் கதை இது.

#குருவி வீடு

ஒரு பெண்ணின் உழைப்பை நன்கு அறிந்த குடும்பம் அந்த பெண்ணிற்கு எப்போதும் நிம்மதியைத் தருவதையே ஆனந்தமாகக் கொள்ளும். பெண்களை முழுமையாக அறிந்து கொள்ளும் ஆண்கள் இருக்கும் குடும்பம் எப்போதும் எவ்வித பேராபத்து வந்தாலும் அதிலிருந்து மீண்டு விடும் பேராற்றலைப் பெற்று விடும். பெண் ஆண் வேலை என தரம் பிரிக்காமல் எல்லா வேலைகளையும் பிரித்துக் கொண்டு செய்கையில் குடும்பமே நிம்மதியில் மகிழும் என்பதை குருவிக்கூடு கதை விவரிக்கிறது.

கதைகளுக்கு தொடர் வாசிப்பை இடைநிறுத்தும்படியான சந்திப்பிழைகளும் ஒற்றுப் பிழைகளும் சரி செய்யப்பட்டிருந்தால் கதை முழுமையான வாசிப்பில் நம்மை இழுத்துச் சென்று நேர்மறை எண்ணங்களை மேலும் மேலும் நமக்குள் புதுப்பித்துக் கொள்வதற்கு வசதி அமைத்துக் கொடுத்திருக்கும்.

நிறைய கவிதை நூல்களையும் ஆன்மீகம் சார்ந்த நூல்களையும் எழுதி இருக்கும் கவிஞர் மா செல்வகுமார் அவர்கள் சிறுகதை உலகிலும் நுழைந்து தனது முதல் சிறுகதைத் தொகுப்பான இந்த நூலை வெளியிட்டு இருக்கிறார். தனது மண் சார்ந்த நிகழ்வுகளை கதைகளில் நுழைத்து தனது கவிதைத்தனத்தையும் ஆங்காங்கே உரையாடல்களில் காட்டியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

கவிஞர் இளையவன் சிவா

# 'உரைவேந்தர்' ஔவை.துரைசாமி

## கட்டுரை

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் சிற்றூரில், சுந்தரம்பிள்ளை - சந்திரமதி தம்பதிக்கு மகனாக 1902ம் ஆண்டு செப்டம்பர் 5ம் தேதி பிறந்தார் அருந்தமிழ் வித்தகர் ஔவை சு.துரைசாமி.



இலக்கிய ஆராய்ச்சித் துறையில் வித்தகராக விளங்கியவர்; பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்; செந்தமிழில் சீரிய புலமை பெற்று விளங்கியவர்; தமிழ் உணர்வுள்ள நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர்; பல்வேறு நூல்களுக்கு "உரைநயம்" கண்டவர்; ஊர்களின் உண்மைப் பெயர்களைத் தக்க சான்றுகளுடன் நிறுவியவர் ; நா நலம் மிக்கவர்; ஆங்கிலத்திலும் வடமொழியிலும் புலமை பெற்றவர்; தாம் வாழ்ந்த காலத்திலேயே "சித்தாந்த கலாநிதி", "உரைவேந்தர்", தமிழ்ச் செம்மல்", எனும் தகைசால் பட்டங்களைப் பெற்றவர்.

கரந்தையை விட்டு வெளியேறிய பின்னர், 1929ம் ஆண்டு முதல் 1941 ம் ஆண்டு வரை வட ஆர்க்காடு மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் 1942ம் ஆண்டு ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்தார்.

பின்னர், 1943ம் ஆண்டு முதல் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில், விரிவுரையாளரானார். எட்டு ஆண்டுகள் தொடர்ந்து அங்கு பணிபுரிந்தார். மதுரை தியாகராசர் கல்லூரியில் 1951 ம் ஆண்டு பேராசிரியராக விளங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும்போது, சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற அரிய நூல்களை எழுதினார்.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

அந்நூல்கள் பல்கலைக்கழகத்தின் வெளியீடுகளாக வெளியிடப்பட்டன.

புறநானூறு ,ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, சிலப்பதிகாரம் , மணிமேகலை , சீவக சிந்தாமணி , திருவருட்பா , சூளாமணி ஆகிய நூல்களுக்கு உரை எழுதியதுடன் , ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை , திருமால் போற்றும் திருப்பதிகவுரை , திருவோத்தூர் தேவாரத் திருப்பதிகவுரை , சிவஞான முனிவர் அருளிச் செய்த சிற்றுரை, யசோத காவியம் மூலமும் உரையும் பண்டை நாளையச் சேர மன்னர் வரலாறு , தமிழ் நாவலர் சரிதை,மதுரைக் குமரனார் , வரலாற்றுக் காட்சிகள், தெய்வப் புலவர் திருவள்ளுவர் , புது நெறித்தமிழ் இலக்கணம், பெருந்தகைப் பெண்டிர், ஊழ்வினை , ஔவைத் தமிழ், தமிழ்த் தாமரை, ஆர்க்காடு, தமிழ் இலக்கிய வரலாறு, பண்டைக் காலத் தமிழ் மன்னர் வரலாறு போன்ற அரிய நூல்களைத் தமிழுக்கு அளித்துள்ளார்.

உரைவேந்தர், தமிழுக்கு சிறப்பாகத் தொண்டு ஆற்றியதற்காக 1964ம் ஆண்டு மதுரைத் திருவள்ளுவர் கழகம் "பல்துறை முற்றிய புலவர்" என்ற பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்துச் சிறப்பித்தது. அதே ஆண்டு ஔவை சு.துரைசாமிக்கு மணிவிழா நடத்தப்பட்டது. இராதா தியாகராசனார் தம் ஆசிரியப் பெருந்தகையின் உயர் பண்புகளைப் பாராட்டி "உரைவேந்தர்" எனும் பட்டம் வழங்கி தங்கப் பதக்கம் அளித்தார்.

1980ம் ஆண்டு அன்றைய ஆளுநர் பிரபுதாசு பி.பட்வாரி உரைவேந்தருக்குத் "தமிழ்ப் பேரவைச் செம்மல்" எனும் பட்டம் வழங்கி சிறப்பித்தார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், "தமிழ்த்தொண்டு செய்த பெரியார்" எனும் பட்டமும், கேடயமும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

திரு. அ.வில்சன், இதழாசிரியர்

அன்னைத் தமிழுக்காக தமக்கு நினைவு தோன்றிய நாள் முதல் வாழ்நாளின் இறுதி வரையிலும் பாடுபட்ட தமிழ்ச் சான்றோரான, "உரைவேந்தர்" தமது எழுபத்தொன்பதாவது வயதில் 1981ம் ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி இயற்கை எய்தினார். உரைவேந்தரின் தமிழ்த்தொண்டு, உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும்.



நன்றி
https://mutiru-tamilpani.blogspot.com/2011/01/10.html

நாளை

# நமதே

**எதற்கும் தயாராக**

**இருக்க வேண்டும்**

**ஒருநாள் நமக்கான**

**வாய்ப்பு வரும்**

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com